செ.வெ.எண்: 34/ ஜுலை / 2021 நாள்:09.07.2021

# செய்திக் குறிப்பு

## இணையதள தொழில்நெறி திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி

2021-ஆம் ஆண்டு ஜீலை இரண்டாவது வாரம் 12.07.2021 முதல் 16.07.2021 வரை **"தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரம்"** அனுசரிக்கும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் இணைந்து நடத்தும் இணையதளம் வழியாக திறன் விழிப்புணர்வு வாரம் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் இணையதளம் வழியாக மாற்றுத்திறனாளிகளுக்கான திறன் விழிப்புணர்வு, மகளிருக்கான திறன் விழிப்புணர்வு, மூன்றாம் பாலினத்தவருக்கான திறன் விழிப்புணர்வு, முன்கற்ற திறன் அங்கீகரித்தல் (**RPL**) மற்றும் அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவ/மாணவியருக்கான திறன் விழிப்புணர்வு தொடர்பான தகவல்கள் வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் **sbiemptrichy@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம் என திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.சு.சிவராசு, இ.ஆ.ப.** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**